ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1776/41 - 2012 සැප්තැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2012.09.21

*1776/41 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மற்றும் நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணிகளானது நகர அபிவிருத்திச் செயல்திட்டத்தினைக் கொண்டு நடாத்துவதற்கு உடனடியாக தேவைப்படுகின்றது என கருதுவதனால், குறிப்பிட்ட காணி அப்படியான நோக்கத்திற்குத் தேவையென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு 1,*
*2012, செத்தெம்பர் 17.*

**அட்டவணை**

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹறகமை பிரதேச செயலக எல்லையுள், மாகும்புற கிராமத்தில் அமைந்துள்ளதுமான கி.சே.பி. இல. 498 C மாகும்புற தெற்கு மற்றும் இல. 498 A மாகும்புற வடக்கு ஆகிய பகுதியிலுள்ள மஹாகும்புறவத்தை என்றழைக்கப்படும் இரு காணித்துண்டுகள், பதிவு செய்யப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஐ. ஏ. விஜயதிலகவினால் 2010.12.31 ஆந் திகதியிடப்பட்டு, தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இல. 2784 இல் 8.79194 ஹெக்டேயார் விஸ்தீரணமான காணித்துண்டுகள், இல. 1 மற்றும் 2 என காட்டப்பட்டுள்ளன.*

*குறிப்பிட்ட காணிகளின் எல்லைகள் பின்வருமாறு :-*

***காணித்துண்டு இல. 1- (5.32350 ஹெக்டேயார்)***

*வடக்கு : அடிப்பாதை மற்றும் திரு. கே. ஆர். சிறிவர்த்தன அத்துடன் மற்றவர்களினாலும் உரிமை கோரப்படும் காணி ;*

*கிழக்கு : திரு. கே. எச். டி சந்தனியால் உரிமைகோரும் காணி அத்துடன் ஜயலத் பொறியியல் வளவு ;*

*தெற்கு : ஹைலெவல் வீதி, அத்துடன் பிரியாங்கனி பெரேராவாலும் மற்றவர்களாலும் உரிமைகோரப்படும் காணி ;*

*மேற்கு : பிறியாங்கனி பெரேரா, சுனில் சாந்த அத்துடன் மற்றவர்களாலும் உரிமை கோரப்படும் காணி.*

**காணித்துண்டு இல. 2- (3.46844 ஹெக்டேயார்)**

வடக்கு : ஹைலெவல் வீதி மற்றும் மதிப்பீட்டு இலக்கங்கள் 321/2, 416 மற்றும் 416 A இனைக்கொண்டுள்ள வளவுகள் ;

கிழக்கு : ஹைலெவல் வீதி, மயானபூமி மற்றும் தொலேகடை - மாகும்புற வீதி ;

தெற்கு : டி. டி. குலதுங்க மாவத்தை;

மேற்கு : மதிப்பீட்டு இல. 418/7 குலதுங்க மாவத்தை மற்றும் திரு. எச் எல். ரத்னசிறி என்பவரால் உரிமைகோரும் காணி.

10 - 362

---

### 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரச் சபைச் (ந. அ. அ. ச.) சட்டம்

15 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ந. அ. அ. ச. சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சராகிய மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இன்றைய தினத்திலிருந்து, ஜா - எல நகரசபைக்குச் சொந்தமானதும், கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டதுமான காணியினை ஜா- எல ஜயந்தி வித்தியாலய விளையாட்டுத்திடல் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ந. அ. அ. ச. இற்கு இக்கட்டளை மூலம் உடைமையாக்குகின்றேன்.*

மஹிந்த ராஜபக்ஷ,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு - 03.
2012, செத்தெம்பர் 17.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ஜா - எல பிரதேச செயலாளர் பிரிவு, வெலிகம்பிட்டி கிராம, வெலிகம்பிட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவு இல. 190 A இல் அமைந்துள்ளதும் காணி அளவையாளர் நாயகத்தால் 2011. 03.12 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட பூவெல என்றழைக்கப்படும் காணியின் 3 காணித்துண்டுகள், மாதிரிப்பட இல. P. P. Gam 3686 இல் காணித்துண்டு இல. 11, 12 மற்றும் 14 என காட்டப்பட்டுள்ளவை பின்வருமாறு சூழப்பட்டுள்ளன.

**காணித்துண்டு இல. 11 (விஸ்தீரணம் 0.0002 ஹெக்டேயார்)**

வடக்கு : மாதிரிப்பட இல. P. P. Gam 3686 இல் காட்டப்பட்ட காணித்துண்டுகள் இல. 12, 6, 10 அத்துடன் திரு. கே. ஜெ. பர்னாந்தால் உரிமைகோரப்படும் நகர சபை ந. ச. வத்தை ;

கிழக்கு : திரு. கே. ஜெபர்னாந்தால் உரிமைகோரப்படும் நகர சபை (ந. ச.) வத்தை மற்றும் ந. ச. வத்தையின் மிகுதிக் காணியும் ;

தெற்கு : ந. ச. வத்தை மிகுதிக் காணியும் ந. அ. அ. ச. இனால் உரிமைகோரப்பட்ட பூவெல ;

மேற்கு : மாதிரிப்பட இல. P. P. Gam 3686 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 12 மற்றும் ந. அ. அ. ச. இனால் உரிமைகோரப்பட்ட பூவெல.

**காணித்துண்டு இல. 12 (விஸ்தீரணம் 0.0324 ஹெக்டேயார்).**

வடக்கு : மாதிரிப்பட இல. P. P. Gam 3686 இல் காட்டப்பட்ட காணித்துண்டுகள் இல. 3, 10 மற்றும் 10 ;

கிழக்கு : மாதிரிப்பட இல. P. P. Gam 3686 இல் காட்டப்பட்ட காணித்துண்டுகள் இல. 10,11 மற்றும் 14 அத்துடன் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் உரிமை கோரப்பட்ட "பூவெல" காணியும் ஜா- எல நகர சபையினால் உரிமைகோரப்பட்ட "பூவெல" காணியும் ;

தெற்கு : *மாதிரிப்பட இல.* P. P. Gam *3686 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 14, மாதிரிப்பட இல.* P. P. Gam *1638 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 05 மற்றும் மாதிரிப்பட இல.* P. P. Gam *3219 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 1;*

மேற்கு : *மாதிரிப்பட இல.* P. P. Gam *3219 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 01, மாதிரிப்பட இல.* P. P. Gam *3686 இல் காட்டப்பட்ட 3 மற்றும் 13.*

***காணித்துண்டு இல. 14 (விஸ்தீரணம் : 0.0082 ஹெக்டேயார்).***

வடக்கு : *மாதிரிப்பட இல.* P. P. Gam *3686 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 12 மற்றும் ந. அ. அ. ச. இனால் உரிமைகோரப்பட்ட "பூவெல" காணியும் ;*

கிழக்கு : *நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் உரிமைகோரப்பட்ட "பூவெல" காணியும் மாதிரிப்பட இல.* P. P. A. *3116 இல் காட்டப்பட்ட காணி இல. 02 ;*

தெற்கு : *மாதிரிப்பட இல.* P. P. A. *3116 இல் காட்டப்பட்ட காணி இல. 02 மற்றும் மாதிரிப்பட இல.* P. P. Gam *1638 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 05 ;*

மேற்கு: *மாதிரிப்பட இல.* P. P. Gam *1638 இல் காட்டப்பட்ட காணி த்துண்டு இல. 05 மற்றும் மாதிரிப்பட இல.* P. P. Gam *3219 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 01, 12 மற்றும் 13.*

*10- 363*